தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

**<u>முல்லைப் பெரியாறு: கேரள மறுஆய்வு மனு மீது டிச.2-இல் விசாரணை</u>**

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த அனுமதி அளித்து, உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு அளித்த தீர்ப்பை மறுஆய்வு செய்யக் கோரி கேரள அரசு தாக்கல் செய்த மனு மீது டிசம்பர் 2-ஆம் தேதி உச்ச நீதிமன்றத்தில் விசாரணை நடைபெறவுள்ளது. முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் கடந்த மே 7-ஆம் தேதி உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு அளித்த தீர்ப்பை எதிர்த்து, கடந்த ஜூன் மாதம் கேரள அரசு மறுஆய்வு மனுவை தாக்கல் செய்திருந்தது. இந்த மனுவில், "1886-ஆம் ஆண்டு சென்னை மாகாணம்-திருவாங்கூர் சமஸ்தானம் இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் செல்லாது; அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்தலாம் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு, ஏ.எஸ். ஆனந்த் தலைமையிலான அதிகாரமளிக்கப் பட்ட குழுவின் அறிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் அளிக்கப் பட்டுள்ளது. ஆனால், ஆனந்த் குழு தவறான மதிப்பீடுகளின்படி இந்த விவகாரத்தை ஆய்வு செய்துள்ளது. இந்த மறுஆய்வு மனுவை நீதிபதிகளின் அறையில் அல்லாமல் நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த மனு மீதான விசாரணை கடந்த செப்டம்பர் 10-ஆம் தேதி உச்ச நீதிமன்ற அரசியல் சாசன அமர்வு முன் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அப்போதைய நீதிபதி எச்.எல்.தத்து விடுப்பில் இருந்ததால், மனுவை அரசியல் சாசன அமர்வு

விசாரிக்கவில்லை. இந்த நிலையில், இந்த மனு வரும் டிசம்பர் 2-ஆம் தேதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

**பசுமைத் தீர்ப்பாயத்தில் தமிழகம் மனு**

முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் சுற்றுச்சூழலைக் காரணம் காட்டி, கேரள அரசு மனு தாக்கல் செய்தால் அது குறித்து தமிழகத்தின் கருத்தை அறியாமல் எந்த உத்தரவையும் பிறப்பிக்கக் கூடாது என்று தில்லியில் உள்ள தேசிய பசுமைத் தீர்ப்பாயத்தில் தமிழக அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பாக தமிழக அரசு சார்பில் மூத்த வழக்குரைஞர் உமாபதி செவ்வாய்க்கிழமை "கேவியட்' மனு தாக்கல் செய்தார். முன்னதாக கேரள வனத் துறை அமைச்சர் ராதாகிருஷ்ணன், "முல்லைப்பெரியாறு அணை பலவீனமாக இருப்பதால் அதன் அருகே உள்ள பெரியாறு புலிகள் சரணாலயம், அரிய வகை தாவர இனங்கள் ஆகியவை பாதிப்புக்குள்ளாகும். எனவே, அவற்றைத் தடுக்க சட்டரீதியிலான நடவடிக்கை எடுக்கப் போகிறோம்' என்று கூறியிருந்தார். இதன் அடிப்படையில், தமிழக அரசு "கேவியட்' மனுவை தாக்கல் செய்துள்ளதாகத் தெரிகிறது.

**<u>பவானிசாகர் அணை நீர்மட்டம் 87.1 அடி</u>**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 87.1 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,889 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 100 கன அடி நீரும், வாய்க்காலில் 2,3000 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 19.7 டிஎம்சி.

## நவ.28, 29-ல் விலையில்லா ஆடுகளுக்கான குடல்புழு நீக்க முகாம்: ஆட்சியர்

விலையில்லா ஆடுகளுக்கான குடல்புழுநீக்க இலவச முகாம் வரும் 28, 29-ம் தேதிகளில் நடைபெறவுள்ளது என ஆட்சியர் எஸ்.பிரபாகரன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்தி: விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ், ஈரோடு மாவட்டத்தில் 2011-12-ம் ஆண்டில் 3,775 பயனாளிகளுக்கு 15,100 ஆடுகளும், 2012-13-ம் ஆண்டில் 4,246 பயனாளிகளுக்கு 16,984 ஆடுகளும், 2013-14-ம் ஆண்டில் 3,866 பயனாளிகளுக்கு 15,464 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. 2014-15-ல் இதுவரை 3,639 பயனாளிகளுக்கு 14,456 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆடுகளின் நலனை பாதுகாக்கும் வகையில் வரும் 28, 29-ம் தேதிகளில் இலவச குடல்நீக்க முகாம் நடத்த கால்நடை பராமரிப்புத் துறை ஏற்பாடு செய்துள்ளது. ஆடுகள் வழங்கப்பட்ட அனைத்து கிராமங்களிலும் இம்முகாம் நடத்தப்படும். குடல்புழு நீக்க பரிசோதனை செய்வதன் மூலம் ஆடுகளின் எடை அதிகரிப்பதுடன், நோய் எதிர்ப்பு சக்தி, இனவிருத்தி திறன் ஆகியவை அதிகரிக்கும். எனவே, பயனாளிகள் தவறாமல் தங்களது ஆடுகளை இம் முகாமில் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்றார்.

## மீன் வளர்ப்பில் நீர் மேலாண்மை: டிச. 3 இல் பயிற்சி தொடக்கம்

தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் மீன்வளர்ப்பில் நீர்தர பண்புகள் மற்றும் அதன் மேலாண்மை குறித்த பயிற்சி வகுப்பு டிச. 3 ஆம் தேதி தொடங்கி மூன்று நாள்கள் நடைபெறுகிறது. இதுகுறித்து மீன்வளக் கல்லூரி முதல்வர் கோ. சுகுமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தூத்துக்குடி மீன்வளக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின்

மீன்வளச் சூழலியல் துறை சார்பில் ஹைதராபாத்தில் உள்ள தேசிய மீன்வள மேம்பாட்டு ஆணைய நிதியுதவியுடன் மீன் வளர்ப்பில் நீர்த்தரப் பண்புகள் மற்றும் அதன் மேலாண்மைப் பற்றிய பயிற்சி வகுப்பு நடைபெற உள்ளது. மூன்று நாள்கள் நடைபெறும் இப்பயிற்சி டிச. 3 ஆம் தேதி தொடங்குகிறது. பயிற்சியில் மீன் வளர்ப்போர், அலங்காரமீன் பண்ணையாளர்கள், இறால் பண்ணையாளர்கள், இறால் பண்ணையில் பணிபுரிவோர், இறால் வளர்ப்பில் ஆர்வமுள்ள ஊரக இளைஞர்கள் பங்கு பெறலாம். பயிற்சியின் போது, மீன் வளர்ப்பு, அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் இறால் வளர்ப்பில் நீர்தர மேலாண்மை பற்றிய பாடங்கள் செயல்முறை விளக்கங்களுடன் விரிவாக எடுத்துரைக்கப்படும். பயிற்சியில் கலந்துகொள்ள விரும்புவோர் பேராசிரியர் மற்றும் தலைவர், மீன்வளச் சூழலியல் துறை, மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி - 628008 என்ற முகவரியில் தொடர்புகொண்டு தங்களது பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம். பயிற்சிக்கு தேர்வு செய்யப்படும் தகுதியான நபர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும். மேலும் விவரங்கள் அறிய விரும்புவோர் 9095618230 மற்றும் 9443021339 ஆகிய செல்போன் எண்களில் தொடர்பு கொள்ளலாம் என செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு காய்கனி விதை வழங்கல்

உளுந்தூர்பேட்டை ஒன்றிய தோட்டக்கலை சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கம் 2014-15 திட்டத்தின்கீழ் கொத்தமல்லி, மிளகாய், கத்தரி மற்றும் வெண்டை போன்ற காய்கனி விதைகள் விவசாயிகளுக்கு 50 சதவிகித மானியத்தில் வழங்கும் விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பி.ராஜாமணி தலைமை வகித்தார். தோட்டக்கலை துணை இயக்குநர் (பொறுப்பு) கா.வீராசாமி, மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை வேளாண்மை துணை இயக்குநர் பி.ராஜேந்திரன், உளுந்தூர்பேட்டை வேளாண்மை உதவி

இயக்குநர் ச. கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். உளுந்தூர் பேட்டை அட்மா திட்ட தலைவர் கோவிந்தன் பார்வையாளராக கலந்துகொண்டார். இதில் விவசாயிகள் பலர் கலந்துகொண்டு விதைகளை பெற்று பயனடைந்தனர். தோட்டக்கலை அலுவலர் அலெக்சாண்டர் நன்றி கூறினார்.

**<u>அரியலூரில் நாளை விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்</u>**

அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், வியாழக்கிழமை(நவ.27) நடைபெறுகிறது. இது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் எ.சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், அரியலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலக பிரதான கூட்ட அரங்கில் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் விவசாயிகள், முன்னோடி விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப் பிரதிநிதிகள் தங்கள் விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவிக்கலாம் என்று அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>நாகை மாவட்டத்தில் நவ. 28-ல் கால்நடை மருத்துவ முகாம்</u>**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் கால்நடை மருத்துவ முகாம் வரும் 28, 29-ம் தேதிகளில் நடைபெற உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி தெரிவித்தது: கறவைப் பசுக்களின் பால் உற்பத்தித் திறனை பெருக்கவும், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளின் எடைகளை அதிகரிக்கவும் தமிழக அரசு சிறப்பு முகாம்களை நடத்தி வருகிறது. அதன்படி, நவ. 28, 29-ம் தேதிகளில் கறவைப் பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவப் பரிசோதனையும், வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் மாவட்டத்தில் உள்ள 434 ஊராட்சிகளிலும் நடைபெற உள்ளது. விலையில்லா கறவைப் பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறியாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற்ற

பயனாளிகள் மட்டுமல்லாமல், அனைத்து விவசாயிகளும் கால்நடைகளை கொண்டு வந்து பயன்பெறலாம்.

**<u>தக்காளி பயிரில் இலைச்சுருள் நோயை கட்டுப்படுத்த ஆலோசனை</u>**

பெரம்பலூர் மாவட்டத்தில் தக்காளி பயிரில் இலைச்சுருள் வைரஸ் நோயை கட்டுப்படுத்த வேண்டும் என்றார் தோட்டக்கலை துணை இயக்குநர் (பொ) இந்தியரா. இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டாரத்தில் உள்ள சில்லக்குடி, மேத்தால் ஆகிய கிராம பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள தக்காளி பயிரில், இலைச்சுருள் வைரஸ் நோய் ஆங்காங்கே தென்படுகிறது. இந்நோய் தாக்கப்பட்ட செடிகளில் இலைகள் வெளிர் மஞ்சள் நிறமாகி சுருண்டு, செடிகளின் வளர்ச்சி குன்றி காணப்படும். இந்நோய் வெள்ளை ஈ மூலம் மற்ற செடிகளுக்கு பரவும். இதை கட்டுப் படுத்த பாதிக்கப்பட்ட செடிகளை பிடுங்கி எரித்து விட வேண்டும். வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்த இமிடாகுளோபிரிட் 7 மில்லி மருந்தை 10 லிட்டர் நீருக்கு என்ற விகிதத்தில் கலந்து தெளிக்கவும். மேலும், முன் கருகல் நோய் தாக்கப்பட்ட செடிகளில் இளம் இலைகள் பூஞ்சை தாக்குதலுக்குள்ளாகி இலையின் ஓரங்கள் கருகி, நாளடைவில் முதிர்ந்த இலைகளுக்கும் பரவி செடி முழுவதும் கருகி விடும். இதை கட்டுப்படுத்த அசாஸிஸ்ட்ரோபின் 10 டைபென்கோனசோல் என்ற பூஞ்சாணக் கொல்லி கலவையை 10 லிட்டர் நீருக்கு 10 மில்லி வீதம் கலந்து தெளிக்கலாம். காய்துளைப்பான் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. இதன் தாக்குதலினால் தக்காளி காய்களில் துளையிட்டு சேதத்தை ஏற்படுத்தும். இதனைக் கட்டுப்படுத்த ஸ்பினோசேடு பூச்சி கொல்லியை 10 லிட்டர் நீருக்கு 6 மில்லி வீதம் கலந்து தெளிக்கவும். காய்ப்பிடிப்பு திறனை அதிகப்படுத்த, இயற்கை வளர்ச்சி ஊக்கியான பஞ்சகாவ்யா 10 லிட்டர்

நீருக்கு 300 மில்லி அல்லது, பிளானோபிக்ஸ் 4 மில்லி வீதம் கலந்து தெளித்து அதிக மகசூல் பெற்று பயனடையலாம்.

## திருவாரூரில் நவ. 27-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவாரூர் ஆட்சியர் அலுவலகத்தில் வரும் 27-ம் தேதி விவசாயிகள் குறைதீர்க் கூட்டம் நடைபெறவுள்ளது. விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று தங்களது கோரிக்கைகளை தெரிவித்து பயன் பெறலாம் என ஆட்சியர் எம். மதிவாணன் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஏற்றுமதியாகும் "முருங்கை விதை'



முள் முருங்கை, முள்ளில்லா முருங்கை, ஒட்டுரக முருங்கை, நாட்டு முருங்கை என முருங்கையில் பல வகைகள் உண்டு. அனைத்து ரகத்திலும் இரும்பு சத்து பொதிந்து கிடக்கிறது. அனைவரும் விரும்பி உண்ணும் காய்கறிகளில் முருங்கைக்கு தனி இடம் உண்டு. முருங்கை கீரையில் அவியல் மற்றும் பொறியல், முள்முருங்கையில் கேழ்வரகு, பச்சரிசி கலவையில் ரொட்டி, வடை தட்டி சாப்பிடுவோர் ஏராளம். அதன் சுவையே தனி தான். நம்மவர்கள் முருங்கையை பல விதமாக சமைத்து ருசித்து வருகின்றனர். **முருங்கையின் மருத்துவ மகிமை:** வெளிநாட்டினர் முருங்கையின் சத்துக்களை தனியாக

பிரித்து மருந்தாகவும், அழகு சாதன பொருட்கள் தயாரிப்பிலும் பெருமளவு பயன்படுத்துகின்றனர். தமிழகத்தில் இருந்து முருங்கை விதைகளை சேகரித்து வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய விவசாயிகள் நேரடியாகவும், மறைமுகமாவும் உதவுகின்றனர். இந்த வரிசையில் விவசாயிகளின் நண்பனாக மதுரையை சேர்ந்த விவசாயி ஜெயக்குமார் உள்ளார். முருங்கை விதைகளை விவசாயிகளிடம் கொடுத்து விளைவிக்க செய்கிறார். கீரைகள், முருங்கைக்காய்களை விவசாயிகளிடமே கொடுத்து விடுகிறார். முற்றிய முருங்கையின் விதைகளை விலை கொடுத்து வாங்குகிறார். மதுரை மாவட்டம் குட்லாடம்பட்டி சமத்துவபுரம் பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் விதமாக முருங்கை விதைகளை தரம் பிரிக்கும் பணியை ஜெயக்குமார் வழங்கி வருகிறார். இதன் மூலம் பெண் ஒருவர் பகுதி நேரமாக வேலை பார்த்தால் கூட நாள் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.150 சம்பளமாக கிடைக்கிறது. ஜெயக்குமார் கூறுகையில், "முருங்கை எனது பிரதான விவசாயம். மதுரை, தேனி, ஆண்டிபட்டி, வேடசந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் மூலம் முருங்கையை பயிரிட செய்கிறேன். விதைகளை விலை கொடுத்து வாங்குகிறேன். அவற்றை காய வைத்து, சுத்தம் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மும்பை ஏஜன்ட்களுக்கு அனுப்புகிறேன். ஒரு கிலோ ரூ.250 முதல் ரூ.320 வரை விலை போகும். விதைகள் மருந்தாகவும், அழகு பொருள் தயாரிப்பிலும் பயன் படுத்துகின்றனர். முருங்கையை நம்பி விவசாயம் செய்யலாம். அதிக லாபம் கிடைக்கும்," என்றார். தொடர்புக்கு 99523 80304 **கா.சுப்பிரமணியன், மதுரை.**

## ***சின்ன சின்ன செய்திகள்***



**பெரியாறு - வைகைப் பாசனத்திட்டத்தில் நீர் மேலாண்மை :** பெரியாறு - வைகை பாசன உழவர்களின் பயன்பாட்டிற்காக புதிய நெல் இரகங்கள் பற்றிய ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. தட்பவெப்ப நிலைக்கு உகந்த நெல் இரகங்களை கண்டுபிடிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தென்மாவட்ட உழவர்கள் பயன்பெறும் பொருட்டு அகில இந்திய ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை ஆராய்ச்சி திட்டத்தின் மூலம் பெரியாறு - வைகைப் பாசனத் திட்டத்தில் 1971ம் ஆண்டு முதல் நீர் மேலாண்மை பற்றிய ஆய்வுகள் முக்கிய பயிர்களான நெல், கரும்பு, வாழை ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நெல்லில் உழவர்கள் தொடர்ந்து நீர்த்தேக்கம் ஒவ்வொருமுறையும் 5செ.மீ. உயரத்திற்கு நீர் கட்டி கட்டிய நீர் மறைந்த ஒரு நார்ச்சத்து மீண்டும். 5 செ.மீ. உயரத்திற்கு நீர்க்கட்டுவது (காய்ச்சலும், பாய்ச்சலும்) சிறந்த பாசன முறையாக தெரிவு செய்யப் பட்டுள்ளது. இப்பாசன முறையில் பயிர்களின் வளர்ச்சி, விளைச்சல் ஆகியவற்றில் முன்னேற்றம் காண்பதோடு நீர் சிக்கனமும் சுமார் 20 சதம் வரை கிடைக்கிறது. பெரியாறு - வைகை பாசனத்திட்டத்தில் நீர்பற்றாக்குறையுள்ள பொழுது நெல்லுக்கு முறை பாசனம் சிறந்த தொழில்நுட்பமாகக் கண்டறியப்பட்டுள்ளது. இம்முறையில் வாரத்தில் 4 நாட்களுக்கு வாய்க்கால்களில் தண்ணீர் பெறப்பட்டு வயல்களுக்கு பாய்ச்சியும், மீதம் மூன்று நாட்களுக்கு மடைகளை அடைத்து நீர் கொடுக்காமல் இருக்கலாம். மேலும் 6 நாட்கள் வாய்க்கால்களில் தொடர்ந்து நீர் பெறப்பட்டு அதில் வயலில் இரண்டு பாசனமும், அதைத்தொடர்ந்து மடைகளில் 4 நாட்கள் தண்ணீர் தெளிக்காமல் இருந்து, மறுபடியும் 6-4 சுழற்சி முறையில் தண்ணீர் கொடுப்பதனால் நெல் விளைச்சல் பாதிப்பில்லை. மேலும் சுமார் 15-20 சதம் வரை நீர் சேமிப்பும் கிடைக்கிறது. நீர் தட்டுப்பாடான காலங்களில் நேரடி நெல் விதைப்பும் சிறந்த


தொழில்நுட்பமாக கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு தொழிகலக்கிய வயல்களை நன்றாக சமப்படுத்த வேண்டும். சமப்படுத்திய வயல்களில் நெல் விதைக்கும் கருவியைக் கொண்டு முளைகட்டிய நெல் விதைகளை வரிசையில் விதைக்க முடியும். இதன் மூலம் தேவையான பயிர் எண்ணிக்கையைப் பராமரிக்க முடியும். மேலும் பாசன நீரை 5 செ.மீ. உயரத்திற்கு கட்டி, கட்டிய நீர் மறைந்தவுடன் ஒருநாள் கழித்து மீண்டும் நீர் கட்ட வேண்டும். இதனால் நேரடி நெல் விதைப்பில் நீரைச் சிக்கனப் படுத்துவதுடன் நெல் பயிரிடக் கூடிய வயலில் சுமார் 10 நாட்கள் வரை காலஅளவு சேமிப்பும் கிடைக்கிறது. தகவல்: முனைவர் கு.இராமசாமி, துணைவேந்தர், த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003.

**இனிப்பு மக்காச்சோளம் :** இதன் வயது 90 நாட்கள். இதை அனைத்து மண் வகையுள்ள நிலங்களிலும் சாகுபடி செய்யலாம். வடிகால் வசதி அவசியம். இதை அனைத்துப் பட்டங்களிலும் சாகுபடி செய்யலாம். ரோட்டோ வேட்டர் மூலம் ஓர் உழவும், கொக்கி கலப்பை மூலம் ஓர் உழவும் செய்து களைகளை அகற்றி, ஏக்கருக்கு 3 டிப்பர் என்ற அளவில் தொழுஉரம் கொட்டி கலைத்து விட வேண்டும். ஓர்அடி இடைவெளியில், ஓர் அடி அளவுக்கு பார் அணைத்து அதன் மையத்தில் ஓர் அடிக்கு ஒரு விதை வீதம் ஒரு அங்குல ஆழத்தில் நடவு செய்து தண்ணீர் கட்ட வேண்டும். ஏக்கருக்கு 5 கிலோ விதை தேவைப்படும். விதைத்த 3ம் நாள் முளைக்க ஆரம்பிக்கும். அன்று ஒரு தடவை தண்ணீர் கட்ட வேண்டும். பின்னர் மண்ணின் ஈரப்பதத்தைப் பொறுத்து தண்ணீர் கட்டினால் போதும். 20ம் நாளில் களை எடுத்து பரிந்துரைக்கப்பட்ட உரம் வைக்க வேண்டும். தொடர்ந்து 10 நாட்களுக்கு ஒருமுறை 200 லிட்டர் ஜீவாமிர்தக் கரைசலை பாசனத் தண்ணீரில் கலந்து விட வேண்டும். வேறு எந்த பராமரிப்பும் தேவையில்லை. பெரும்பாலும் பூச்சி, நோய் தாக்குதல் இருக்காது. கதிர் வருவதற்கு முன்பாக பூச்சிகள்

தாக்கினால் மூலிகை பூச்சி விரட்டி தெளிக்கலாம். 55ம் நாளில் ஆண் பூவெடுக்கும் 60-ம் நாளில் பெண் பூவெடுத்து, கதிர் உருவாகும். 75ம் நாளிலிருந்து கதிர்முற்ற ஆரம்பிக்கும். தொடர்ந்து 90ம் நாள் வரை தினம் அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கருக்கு 6 டன் அளவிற்கு கதிர்கள் கிடைக்கும். ஒவ்வொரு கதிரும் அரை அடி நீளத்தில் இருக்கும். கிலோவுக்கு 3-4 கதிர்கள் நிற்கும். அனுபவ விவசாயி சேகர், திருவண்ணாமலை மாவட்டம், சு.கீழநாச்சிப்பட்டு கிராமம், தினமும் 200 கிலோவில் இருந்து 300 கிலோ அளவுக்கு அறுவடை செய்து 1 கிலோ 20 ரூபாய்க்கு உழவர் சந்தையில் விற்பனை செய்கிறார். 1 ஏக்கரில் கிடைக்கிற 6 டன் கதிர் மூலம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் எடுக்கிறார். 30 ஆயிரம் ரூபாய் செலவு போக 90 ஆயிரம் ரூபாய் லாபம் கிடைக்கிறது. கமிஷன் கடைகளுக்கு அனுப்பினால் 50 ஆயிரம் ரூபாய் தான் லாபம் கிடைத்திருக்கும் என்கிறார். தொடர்புக்கு : சேகர், போன்: 97876 00991.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**<u>பட்டுப்புழு வளர்க்க தமிழ்நாடு அரசு வழங்கும் பயிற்சிகள்</u>**



தமிழ்நாடு அரசு சார்பாக கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் ""அரசு பட்டுப்புழு பயிற்சி நிலையம்" சிறப்பாக செயல்படுகிறது. அலுவலர் களுக்கும், விவசாயிகளுக்கும் மகசூல் மேம்படுத்தும் பயிற்சிகள், நோய்கள் கட்டுப்படுத்த பயிற்சிகள், பட்டுப்புழு வளர்ப்பு, முட்டை சேமிப்பு என பல்வேறு துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்த நிறுவனம் மத்திய அரசு பயிற்சி நிறுவனங்களுடன் சேர்ந்து பெங்களூரு, மைசூருவிலும் உள்ள மத்திய பட்டு பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையங்களிலும் பயிற்சிகள்

வழங்கப்படுகின்றது. பெண்களுக்கு மைசூருவில் இலவசப் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. பயிற்சிகள்: முசுக்கொட்டையில் ஒருங்கிணைந்த சத்து மற்றும் நோய் மேலாண்மை முறைகள் 6 நாட்கள், இளம் புழு வளர்ப்பு 8 நாட்கள், இளம் /முதிர் புழு வளர்ப்பு 35 நாட்கள், பூச்சி / நோய் மேலாண்மை 10 நாட்கள், மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு 6 நாட்கள், கை கருவி மூலம் வேலைப்பளு குறைப்பு 6 நாட்கள், பட்டு முட்டை உற்பத்தி, பட்டுப்புழு வளர்ப்பை இயந்திரமயமாக்குதல் பயிற்சி. **முழு விபரங்களுக்கு :** தமிழ்நாடு அரசு பட்டு வளர்ப்பு பயிற்சி மையம், ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். போன்: 04344 - 225 628. H.O: சேலம் - 0427 - 229 61661. இந்திய அரசு பட்டுப்புழு பயிற்சி நிலையம், 5/1, Opp: க.ஐ.இ, மத்திய பட்டு வாரியம், 44, தளிரோடு ஓசூர்-635 110, கிருஷ்ணகிரி மாவட்டம். போன்: 04344 - 220 520, 522 043. Ecgrc@eth.net. தமிழ்நாடு முழுவதும் உள்ள மத்திய, மாநில அரசு பட்டுப்புழு வளர்ப்பு பயிற்சி மையங்கள், சோதனை சான்று நிலையம், ஆலோசனை வழங்கும் நிலையங்கள் பற்றி அறிய www.seri.ap.gov.in, www.tnsericulture.gov.in, www.agritech.tnau.ac.in ஆகியவலைத்தளங்களைபாருங்கள். தொழில்நுட்பம் ஆலோசனை பெற பேராசிரியர், பட்டுப்புழு வளர்ப்பு துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், மருதமலை சாலை, கோயமுத்தூர்-641 003. போன்: 0422 - 661 1296, வலை : www.tnau.ac.in அணுகலாம். **- எம்.ஞானசேகர், தொழில் மற்றும் விவசாய ஆலோசகர் 93807 55629**

<u>**திருந்திய நெல் சாகுபடி விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை**</u>

திருத்தணி: திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, இயந்திர நடவு செய்வதற்காக, 1,500 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

இயந்திரம் மூலம் நடவுதிருத்தணி ஒன்றியத்தில் உள்ள, 27 ஊராட்சிகளில், 18 ஆயிரம் விவசாயிகள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலான விவசாயிகள் நெல் சாகுபடி செய்கின்றனர். திருந்திய நெல் சாகுபடி செய்தால், மகசூல் அதிகளவில் பெறலாம் என்பதை விவசாயிகளுக்கு உணர்த்துவதற்காக, இயந்திரம் மூலம் நடவு செய்யும் தொகை, 2.47 ஏக்கருக்கு, அரசு, ஊக்கத்தொகையாக 1,500 ரூபாய் வழங்குகிறது. இந்த ஊக்கத் தொகை பெற, விவசாயிகள், விண்ணப்பம் பூர்த்தி செய்து வேளாண் அலுவலகத்தில் கொடுக்க வேண்டும். இதுகுறித்து, திருத்தணி வேளாண் உதவி இயக்குனர் பிரசாத் கூறியதாவது: திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 2.47 ஏக்கருக்கு, 1,500 ரூபாய் வழங்கப்படும். இந்த தொகை அந்தந்த விவசாயிகளின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைக்கப்படும். இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற விரும்பும் விவசாயிகள், அந்தந்த பகுதி வேளாண் உதவி அலுவலர்களிடத்தில், விண்ணப்பம் வாங்கி, பூர்த்தி செய்து, சிட்டா நகலுடன் வரும் அடுத்த மாதம், 31ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும். தொடர்புக்கு... திருத்தணி ஒன்றியத்தில், 148.20 ஏக்கருக்கு இந்த ஊக்கத் தொகை வழங்கப்படும். முதலில் விண்ணப்பிக்கும் விவசாயிகளுக்கு மட்டும் முன்னுரிமை அடிப்படையில் ஊக்கத் தொகை வழங்கப்படும்.மேலும் விவரங்களுக்கு, விவசாயிகள், 9444553719 என்ற அலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம். இவ்வாறு, அவர் கூறினார்.

## விவசாயிகளுக்கு வீரிய ரக விதைகள்

செஞ்சி: செஞ்சியில் தோட்டக்கலைத்துறை மூலம் விவசாயிகளுக்கு வீரிய ரக விதைகள் மானியத்தில் வழங் கினர். செஞ்சி ஒன்றியம் வி. நயம்பாடி, சத்தியமங்கலம், மேல்எடையாளம் கிராம விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்

துறை மூலம் கொத்தமல்லி, மிளகாய், வெண்டை, கத்தரி வீரிய விதைகள் மானிய விலையில் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. தோட்டக்கலை உதவி இயக்குநர் அன்பழகன் முன்னிலை வகித்தார். ஒன்றிய சேர்மன் லட்சுமி சேகர் மானிய விதைகளை விவசாயிகளுக்கு வழங்கினார். கூட்டுறவு கடன் சங்க தலைவர் கோவிந்தசாமி, உதவி வேளாண்மை அலுவலர்கள் அம்பேத்கர், பார்த்திபன், சபாபதி, நவீன்ராஜ் ஆகியோர் பங்கேற்றனர். குறைந்த நீரில் அதிக லாபம் தரக்கூடிய தோட்டப்பயிர்கள் குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

**கருமந்துறை தோட்டக்கலை பண்ணையில் முதன்முறை பழக்கண்காட்சி, பயிற்சி முகாம்**

மேட்டூர் : கருமந்துறை அரசு தோட்டக்கலை பண்ணையில் முதன்முறையாக, நாளை (நவ.,27) தோட்டக்கலை உற்பத்தி பொருட்கள் மற்றும் விவசாயிகள் பயிற்சி முகாம் நடக்கிறது. சேலம் மாவட்டம், கருமந்துறையில் அரசு தோட்டக்கலை பழப் பண்ணை உள்ளது. மொத்தம், 1,000 ஏக்கர் பரப்பளவு கொண்ட பழப்பண்ணையில் மா, கொய்யா, நெல்லி, சப்போட்டா, பலா, வாழை உள்பட ஏராளமான பழ மரங்கள் காணப் படுகிறது. மேலும், பழமரக்கன்றுகளும் உற்பத்தி செய்யப் படுகிறது. கருமந்துறை தோட்டக்கலை பண்ணையில், முதன்முறையாக, நாளை (நவ.,27), விவசாயிகளுக்கான தோட்டக்கலை பொருள் கண்காட்சி மற்றும் பயிற்சி முகாம் நடக்கிறது. கண்காட்சியில் மாவட்டத்தின் ஒவ்வொரு பகுதியிலும் உற்பத்தி செய்யப்படும் முக்கிய தோட்டக்கலை பழம், காய்கறி இடம்பெறுகின்றனர்.இதில், மேச்சேரி வட்டாரத்தில் அதிக அளவில் உற்பத்தியாகும், தக்காளி வகை, கொளத்தூர் ஒன்றியத்தில் உற்பத்தியாகும் மிளகாய், மாதுளை, நங்கவள்ளி பகுதியில் உற்பத்தியாகும் மாம்பழ ரகங்கள்

உள்பட ஏராளமான கனி மற்றும் காய் வகைகள் இடம்பெறுகின்றன.பயிற்சி முகாமில், தோட்டக்கலை பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்படவுள்ளது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் விவசாயிகளை தேர்வு செய்து கண்காட்சிக்கு அழைத்து செல்ல தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## விவசாயத்தில் புதிய தொழில் நுட்பம் உழவர் மன்றம் துவங்க யோசனை

சென்னிமலை : உழவர் மன்றங்களை விவசாயிகள் துவங்கினால், புதிய தொழில் நுட்பங்களை கற்று கொள்ளலாம், என, நபார்டு உதவி பொதுமேலாளர் யோசனை தெரிவித்தார். ஈரோடு-பெருந்துறை மெயின் ரோடு, கூரபாளையத்தில் தாழம்பூ, பசும்பிடி, அகரம், தாமரை என, நான்கு உழவர் மன்றங்களின் துவக்க விழா மற்றும் வேளாண் கருத்தரங்கம், நபார்டு வங்கி உதவியுடன், சென்னிமலை அஸ்வத் தொண்டு நிறுவனம் சார்பில் நடந்தது.அஸ்வத் நிறுவன மேலாண்மை இயக்குனர் செல்வராஜ் தலைமை வகித்தார். இயக்குனர் பார்த்தீபன் வரவேற்றார். உழவர் மன்றங்களை துவக்கி வைத்து, நபார்டு உதவி பொது மேலாளர் சந்தானம் பேசியதாவது: விவசாயிகள் நலனுக்காக, நபார்டு வங்கி, கிராமம் தோறும் உழவர் மன்றங்களை துவங்கி, அம்மன்றத்துக்கு, நிதியுதவி வழங்குகிறது. விவசாயிகளின் வாழ்வாதாரம் சீர் செய்யவும், நவீன வேளாண் யுக்திகளை கற்று தரவும், விவசாயிகள் புதிய தொழில் நுட்பங்களை வெளி மாவட்டம், வெளிமாநிலத்துக்கு சென்று அறிந்து வர, நபார்டு வங்கி, உழவர் மன்றங்களுக்கு நிதியுதவி வழங்குகிறது.உழவர் மன்றங்கள் துவங்கினால், தொடர்ந்து, மூன்று ஆண்டுகளுக்கு, பத்தாயிரம் ரூபாய்க்கு மிகாமல் நிதியுதவி வழங்கப்படும், என்றார். முன்னோடி வங்கி மேலாளர் செல்வராசு பேசுகையில், "வங்கிகள், விவசாயிகளுக்கு கடன் தர தயாராக உள்ளது.

விவசாயிகள், உரிய தவணை தேதிகளில் கடனை திருப்பி செலுத்தினால், வட்டி சலுகையும் வழங்குகிறோம். விவசாய பண்ணைகள் அமைக்க கடன் வழங்குகிறோம்," என்றார்.சிறந்த விவசாயிக்கான விருது பெற்ற பரமேஸ் வரன், ராஜமாணிக்கம் ஆகியோர், கவுரவிக்கப்பட்டனர்.வேளாண் வணிக அலுவலர் சண்முகசுந்தரம், வட்டார வேளாண் அலுவலர் பெரியசாமி, தோட்ட கலைத்துறை துணை இயக்குனர் பிரபு, நசியனூர் கனரா வங்கி கிளை மேலாளர் ஜெயகுமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

## ஆடுகளுக்கு குடற்புழு நீக்க சிறப்பு முகாம்

ஈரோடு : ஈரோடு மாவட்டத்தில், வரும் 28ம் தேதி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க சிறப்பு முகாம் நடக்கிறது. அரசின் இலவச ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ், ஈரோடு மாவட்டத்தில், கடந்த, 2011-12ம் ஆண்டு, 3,775 பயனாளிகளுக்கு, 4.81 கோடி ரூபாய் மதிப்பில், 15,100 ஆடுகள் மற்றும், 2012-13ம் ஆண்டு, 4,246 பயனாளிகளுக்கு, 5.41 கோடி ரூபாய் மதிப்பில், 16,984 ஆடுகள், 2013-14ம் ஆண்டில், 3,866 பயனாளிகளுக்கு, 5.03 கோடியில், 15,464 ஆடுகள் மற்றும், 2014-15ம் ஆண்டில் அக்., வரை, 3,639 பயனாளிகளுக்கு, 4.80 கோடி ரூபாய் மதிப்பில், 14,556 ஆடுகள் வாங்கி, வழங்கப்பட்டுள்ளது.இந்த ஆடுகளின் நலனை பாதுகாக்கும் வகையில், வரும், 28, 29ம் தேதிகளில், மாவட்டத்தில் சமீபத்தில் வழங்கப்பட்ட அனைத்து ஆடுகளுக்கும், இலவசமாக குடற்புழு நீக்க முகாம் நடத்த, கால்நடை பராமரிப்பு துறை ஏற்பாடு செய்துள்ளது. ஆடுகள் வழங்கப்பட்ட, அந்தந்த கிராமங்களில், குடற்புழு நீக்க முகாம் நடத்தப்படும். குடற்புழு நீக்கம் செய்வதன் மூலம், ஆடுகளின் உடல் எடை கூடுவது மட்டுமின்றி, நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் இனவிருத்தி திறன் அதிகரித்து, ஆடுகளின் மூலம் கிடைக்கும் வருவாய் அதிகரிக்கும்.எனவே, இம்முகாமை

பயன்படுத்தி, ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்ய வேண்டும், என்று, கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் கேட்டு கொண்டுள்ளார்.

**<u>சிறையில் கோழி வளர்ப்பு பண்ணை ஆய்வுக்கு வந்த ஏ.டி.ஜி.பி., துவக்கம்</u>**

திருச்சி: மத்திய சிறையில், ஆய்வு செய்ய வந்த, ஏ.டி.ஜி.பி., திரிபாதி, நேற்று, கைதிகள் மூலம் அமைக்கப்பட்டு உள்ள கோழி பண்ணையை தொடங்கி வைத்தார். தமிழகத்தில் சென்னை (புழல்), வேலூர், மதுரை, கோவை, திருச்சி உள்ளிட்ட, பத்து இடங்களில் மத்திய சிறைச்சாலை அமைந்துள்ளது. விசாரணை மற்றும் தண்டனை கைதிகள் என, 5,000 பேர் வரை, ஒவ்வொரு மத்திய சிறையிலும் அடைத்துள்ளனர். சிறையில் தண்டனை கைதிகளுக்கு வேலை வழங்கும் வகையில், கோவை மத்திய சிறையில், போலீஸாருக்கான சீருடை உற்பத்தி, திருச்சியில், சிறை கைதிகள் பயன்பாட்டுக்கான சோப்பு மற்றும் மெழுகுவர்த்தி உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. சிறையில் உள்ள கைதிகளை கொண்டு, ஃப்ரீடம் ஹோட்டல், காய்கறி உற்பத்தி போன்ற வற்றையும் செய்து வருகின்றனர். திருச்சி மத்திய சிறையில் உள்ள கைதிகள், கோழி பண்ணை மற்றும் காளான் பண்னை அமைத்து உள்ளனர். தமிழக சிறைத்துறை, ஏ.டி.ஜி.பி., திரிபாதி, நேற்று, திருச்சி மத்திய சிறைக்கு ஆய்வுக்கு வந்திருந்தார். அவர் சிறை பாதுகாப்பு, நிர்வாகம் ஆகியவற்றை ஆய்வு செய்தார். பின்னர், சிறை வளாகத்தில் புதிதாக அமைத்துள்ள கோழிப்பண்ணையை தொடங்கி வைத்தார். தொடர்ந்து, காந்தி மார்க்கெட் பகுதியில் உள்ள மகளிர் சிறைக்கு ஆய்வு சென்றார். அந்த சிறை வளாகத்தில், புதிதாக கட்டப்பட்டுள்ள கைதிகள் கேண்டினை துவக்கி வைத்தார். மதியம், மத்திய சிறை வளாகத்தில் நடந்த சிறைக் காவலர்களின் பயிற்சி வகுப்பை பார்வையிட்டார். இது குறித்து சிறைத்துறை அதிகாரிகள்

கூறியதாவது: வருடாந்திர ஆய்வுக்காக வந்த, ஏ.டி.ஜி.பி., திரிபாதி, சிறையில் கைதிகளை கொண்டு அமைத்துள்ள கோழிப்பண்ணை, காளாண் பண்ணை ஆகியவற்றையும், மகளிர் சிறையில் துவங்கிய கேண்டீன் ஆகியவற்றை திறந்து வைத்தார். சிறையில் பாதுகாப்பு, பயிற்சி பள்ளியின் செயல்பாடு ஆய்வு செய்த அவர், சிறை காவலர்களிடம், கோரிக்கை மனுக்களை பெற்றுச் சென்றார், என்று கூறினர்.

## அன்னாசி பழம் கிலோ ரூ.15

திண்டுக்கல் : வரத்து அதிகரிப்பால் திண்டுக்கல்லில் ஒரு கிலோ அன்னாசி பழத்தின் விலை ரூ.15 ஆக சரிந்தது. கேரளா மற்றும் பன்றிமலை, கொடைக்கானல் பகுதிகளில் விளையும் அன்னாசி பழம் விற்பனைக்காக திண்டுக்கல்லுக்கு கொண்டு வரப்படுகிறது. நகரில் உள்ள பழக்கடைகளில் சில்லறை விற்பனையாக ஒரு கீற்று ரூ.10 க்கும், ஒரு கிலோ ரூ.40 க்கும் விற்கப்படுகிறது. சில நாட்களாக கேரளாவில் இருந்து லாரிகள் மூலம் அன்னாசி பழம் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. ஒரு கிலோ ரூ.15 முதல் ரூ.20 வரை விற்கப்படுகிறது. திடீர் விலை குறைவால் ஏராளமான பொதுமக்கள் வாங்கி செல்கின்றனர். தினமும் 5 டன் பழங்கள் விற்னையாகின்றன. இதனால் உள்ளூர் பழ வியாபாரிகள் பாதிக்கப் பட்டுள்ளனர். திண்டுக்கல் வியாபாரிகள் கூறியதாவது:"அறுவடை முடிந்தநிலையில் கடைசியாக உள்ள குட்டை அன்னாசி பழங்களை லாரிகளில் கொண்டு வந்து விற்கின்றனர். இந்த ரக பழங்கள் புளிப்பாக இருக்கும். விலை குறைவால் பொதுமக்கள் அதிகளவில் வாங்கி செல்கின்றனர். நல்ல ரக பழங்கள் ரூ.30 முதல் ரூ.50 க்கு விற்கப்படுகிறது,' என்றனர்.

## பெரியகுளம் பகுதியில் மா விவசாயம் கூடுதல் பரப்பில் சாகுபடி செய்ய வாய்ப்பு

பெரியகுளம் : பெரியகுளம் பகுதியில் வடகிழக்கு பருவமழையின் "கொடையால்' மா ஏக்கர் பரப்பளவு அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. பெரியகுளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளான சோத்துப்பாறை, கும்பக்கரை, ஈஞ்சமலை,செழும்பு,புலிக்கூடு,கோயில்காடு, முருகமலை, வறட்டாறு, கருங்கல் உட்பட பல பகுதிகளில் 20 ஆயிரம் ஏக்கருக்கு அதிகமாக மா சாகுபடி செய்யப்படுகின்றது.தமிழகத்தில் சேலம், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு பிறகு மா விளைச்சலில் பெரியகுளம் பகுதி முன்னிலையில் உள்ளது. பெரியகுளம் தோட்டக்கால் மண்ணிற்கு அல்போன்ஷா, காளைபாடி, மல்கோவா,பங்கனபள்ளி, சப்போட்டா, காசாகாய், நாட்டுக்காய் உட்பட அனைத்து வகையான மா மரங்கள் உள்ளன. பெரியகுளம் மண்ணிற்கு மாங்காய் சுவை அதிகம் என்பதால் அனைத்து ஊர்களிலும் வரவேற்பு பெற்றுள்ளது. கடந்தாண்டு குறைந்தளவு பருவமழையால் மா விவசாயிகள் சிலர் தங்களது தோப்புகளை உழவு பணி மேற்கொள்ளாமல் கிடப்பில் விட்டனர். தற்போது பெய்துள்ள வடகிழக்கு பருவமழை மண்ணை மகிழ்ச்சியூட்டியுள்ளது. அனைத்து விவசாயிகளும், விவசாய பணியை ஆர்வமுடன் செய்வதற்கு முனைப்பு காட்டியுள்ளனர். குறிப்பாக மா விவசாயிகள் கூடுதல் உற்சாகத்துடன் உழுவு பணியில் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர். இதில் அதிகளவில் மா கன்றுகளை நட உள்ளனர். இதனால் பெரியகுளம் பகுதியில் மா விவசாயத்தின் பரப்பளவு அதிகரிக்கும் நிலை உள்ளது.

## கிலோ 100 ரூபாய்க்கு விற்கப்படும் வெங்காயம் ஊடுபயிராக சாகுபடி

ஆர்.எஸ்.மங்கலம் : ஆண்டுதோறும் பருவ மழை காலங்களில் வெங்காய உற்பத்தி பாதிக்கப்பட்டு, விலை உயரும். மழை குறைவான பகுதிகளில் இருந்து புதிய வெங்காயம் வர துவங்கிய பின், விலை படிப்படியாக குறையும். ஆனால், கடந்த ஆண்டு வெங்காய வரத்து இல்லாததால், கிலோ ரூ.50க்கு விற்கப்பட்ட சின்னவெங்காயம் ரூ.100 க்கும், ரூ.40க்கு விற்கப்பட்ட பெரிய வெங்காயம் ரூ. 85 வரையும் விற்கப்பட்டது. இந்த விலை உயர்வு, ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் சுற்றுப்புற பகுதிகளான புல்லமடை, சனவேலி,சேத்திடல், சீனாங்குடி, வண்டல், செங்குடி, பூலாங்குடி, உட்பட பல்வேறு கிராமங்களில் விவசாயிகளிடையே வெங்காயம் உற்பத்தி செய்யும் ஆர்வத்தை தூண்டியுள்ளது. இதனால் விதைப்பு செய்யப்பட்டுள்ள மிளகாய் வயல்களில் சின்ன வெங்காயம் ஊடுபயிராக பயிரிட்டுள்ளனர். செங்குடி விவசாயி மிக்கேல்ராஜ் கூறுகையில்,"" வெங்காய விதை கிலோ ரூ.120க்கு வாங்கி, மிளகாய் வயல்களில் ஊடுபயிராக பயிர்செய்துள்ளேன். வெங்காய விலை உயர்ந்துள்ளதால் வெங்காயம் சாகுபடி செய்து வருகிறோம்," என்றார்.

## நூறு நாள் பணியாளர்கள் விவசாயத்துக்கு கிடைப்பதால் மகிழ்ச்சி! களை எடுப்பது முதல் நடவு வரை பற்றாக்குறை இல்லை

காரைக்குடி : தற்போது ஊராட்சிகளில் நூறு நாள் திட்ட பணியாளர் களுக்குரிய வேலை பெருமளவு நடக்காததால், விவசாய பணிகளுக்கு களை எடுக்க பெண்கள் அதிக அளவில் ஆர்வமுடன் வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். கடந்த ஆட்சியில் அனைவருக்கும் வேலை என்ற திட்டத்தின் அடிப்படையில் நூறுநாள் திட்ட பணிகள் ஊராட்சிகளில்

அறிமுகப்படுத்தப்பட்டது.ஆரம்பத்தில் காலை 8 மணிக்கு வேலைக்கு சென்று 10 மணிக்கு வீடு திரும்பி கொண்டிருந்தனர். வேலை செய்கிறீர் களோ, இல்லையோ, 2 மணி வரை கட்டாயம் பணியில் இருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இதனால் விவசாயத்துக்கு ஆட்கள் பற்றாக்குறை நாளுக்கு நாள் அதிகரித்தது.விவசாய காலங்களில், நூறுநாள் திட்ட பணிகள் மேற்கொள்ள கூடாது, என அரசு அறிவுறுத்தியும், அரசு ஒதுக்கிய பணத்தை செலவழித்தாக வேண்டும், என பல இடங்களில், வேலை ஜரூராக நடந்தது. ஆட்சி மாற்றத்திற்கு பின், இந்த திட்ட பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கு வதில், சற்று தொய்வு ஏற்பட்டது. தற்போது சில ஊராட்சிகளில் நூறு நாள் திட்ட பணிகள் நடந்தாலும் பெரும்பாலான ஊராட்சிகளில் நடக்கவில்லை. மாற்று வேலையாக தற்போது விவசாய பணிக்கு பெண்கள் அதிக அளவில் வரத் தொடங்கி உள்ளனர்.பெரியகோட்டை பெத்தாட்சி குடியிருப்பு விவசாயி முத்து கூறும்போது: நூறு நாள் வேலை இருக்கும்போது, களை எடுப்பதிலிருந்து, அறுவடை முடியும் வரை, குடும்பத்தார் நின்று வேலை செய்தால் அன்றி, விளைச்சலை எடுக்க முடியாது. 25 நாளில் களை எடுக்க வேண்டும். ஆட்கள் பற்றாக்குறையால், ஒரு சில நேரங்களில் களை எடுக்க முடியாமலேயே போய்விடும். இதனால் மருந்து தெளிப்பது, உரம் போடுவது தாமதமாகும். பயிர்கள் சேதமாகும். தற்போது அந்த நிலை இல்லை. அதிக அளவில் பெண்கள் விவசாய பணிக்கு கிடைக்கின்றனர். காலை 5.30 பணியை ஆரம்பிக்கும் இவர்கள், மதியம் 2 மணிக்கு கரையேறி விடுவார்கள். 170 ரூபாய் நாள் கூலி. இனி வரும்காலங்களில் நூறுநாள் திட்டத்தை முழு அளவில் செயல்படுத்தினாலும், விவசாயம் நடக்கும் மாதங்களில் கண்டிப்பாக நிறுத்தினால் தான், எதிர்காலத்தில் விவசாயம் சிறக்கும், என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>வங்கக் கடலில் மீண்டும் காற்றழுத்தம் தமிழகத்தில் மழை பெய்யும்</u>**



சென்னை: இந்திய பெருங்கடல் மற்றும் தென் கிழக்கு வங்கக் கடலை ஒட்டிய பகுதியில் வளி மண்டல மேல் அடுக்கில் ஏற்பட்ட காற்று சுழற்சி காரணமாக தென் மேற்கு வங்கக் கடலில் குறைந்த காற்றழுத்தம் உருவாகியுள்ளது. அதனால் தமிழகத்தில் மீண்டும் மழை பெய்யத் தொடங்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வங்கக் கடலில் கடந்த வாரம் உருவான காற்றழுத்தம் காரணமாக தமிழக கடலோரம் மற்றும் தென் மாவட்டங்களில் மழை பெய்தது. அந்த காற்றழுத்தம் மேற்கு நோக்கி நகர்ந்து சென்று விட்டதால் கடந்த சில நாட்களாக வட தமிழகத் தில் வறண்ட வானிலை காணப்படுகிறது. இந்நிலை யில், வங்கக் கடலின் தென் கிழக்கு திசையில் வளி மண்டல மேல் அடுக் கில் காற்று சுழற்சி உருவானது. அதன் காரணமாக தென் தமிழகத்தில் மழை பெய்து வருகிறது. அதிகபட்சமாக நேற்று ராமநாத புரத்தில் 30 மிமீ மழை பெய்துள் ளது. பாம்பனில் 20 மிமீ மழை பெய்துள்ளது. இதற்கிடையே, தென் கிழக்கு திசை மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதியை ஒட்டிய கடல் பகுதியில் உருவாகி இருந்த காற்று சுழற்சியால் வங்கக் கடலின் தென்மேற்கு திசையில் குறைந்த காற்றழுத்தம் ஒன்று உருவாகியுள்ளது. இது மேலும் வலுப்பெற்று தென் மேற்கு திசையில் நகரக்கூடும். அதனால் தமிழகத்தில் நாளை முதல் கனமழை பெய்யத் தொடங்கும். குறிப்பாக

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக் கோட்டை, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, சிவகங்கை, விருதுநகர் மாவட்டங்களில் மிதமான மழையோ அல்லது கனமழையோ பெய்யும். தமிழகத்தின் பிற மாவட்டங்களில் லேசான மழை பெய்யும்.

## கிணத்துக்கடவு மார்க்கெட்டில் தக்காளி கிலோ ரூ.20

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி அடுத்த கிணத்துக்கடவு மார்க்கெட்டில் தக்காளி விலை மீண்டும் உயர்ந்துள்ளது. தற்போது ஒருகிலோ ரூ.20க்கு விற்பனையாகிறது. பொள்ளாச்சியை அடுத்த கிணத்துக்கடவு மார்க்கெட்டுக்கு உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து காய்கறிகள் கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இதில் தக்காளி, கிணத்துக்கடவு சுற்றுவட்டார பகுதி மட்டுமின்றி வடசித்தூர், சூலக்கல், ஆதியூர், சொக்கனூர், சிங்கையன்புதூர், நெ.10 முத்தூர், நெகமம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் உடுமலை, மடத்துக்குளம், கனியூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்தும் விற்பனைக்காக அதிகளவு கொண்டுவரப்படுகிறது.

இந்த ஆண்டில் கடந்த 4 மாதங்களுக்கு முன்பு பல கிராமங்களில் தக்காளி சாகுபடி அதிகளவு இருந்தது. அந்நேரத்தில் சாகுபடி செய்யப்பட்ட தக்காளி கடந்த அக்டோபர் மாதத்தில் அறுவடை செய்யப்பட்டதால், மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து வழக்கத்தை விட அதிகமாக இருந்தது. இதனால் இந்த மாதம் துவக்கம் வரை தக்களி விலை மிகவும் குறைவாக காணப்பட்டது. ஒருகிலோ ரூ.8 முதல் ரூ.10 வரை என குறைந்த விலைக்கு விற்பனையானது. இந்நிலையில் கடந்த இரண்டு வாரமாக கிணத்துக்கடவு மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து சற்று குறைந்துள்ளது. உள்ளூர் மற்றும் வெளியிடங்களில் இருந்து தக்காளி வரத்து குறைவால் கூடுதல் விலைக்கு

விற்பனை செய்யப்படுகிறது. இதில் நேற்று 15 கிலோ எடைகொண்ட ஒருபெட்டி தக்காளி ரூ.250 முதல் ரூ.280 வரை ஏலம் போனது. சராசரியாக ஒரு கிலோ ரூ.18 முதல் ரூ.20க்கு விற்பனை செய்யப்படுவதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

## சின்ன வெங்காயம் மறைமுக ஏலம்

திருச்சி,: துறையூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நாளை சின்னவெங்காயம் மறைமுக ஏலம் நடை பெற உள்ளது. திருச்சி வேளாண் விற் பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் துறையூரில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் இயங்கி வருகிறது. இங்கு சின்ன வெங்காயம் மறைமுக ஏலம் நாளை (புதன்கிழமை) நடைபெற உள் ளது. திருச்சி மாவட்டம், துறையூர், உப்பிலியபுரம், தா.பேட்டை உள்ளிட்ட வட்டாரங்களில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்து இருப்பில் வைத் துள்ள விவசாயிகள், தங்க ளிடம் உள்ள சின்ன வெங்காயத்தை துறை யூர் ஒழுங்கு முறை விற்ப னைக் கூடத்துக்கு கொண்டு வந்து மறைமுக ஏலத்தில் பங்கேற்கலாம். இங்கு சின்ன வெங்காயத்துக்கு நல்ல விலை பெறுவதோடு எந்தவித கமிஷனுமின்றி உடனுக்குடன் பணத்தை பெற்று கொள் ளலாம். எனவே, சின்னவெங்காய விவசாயிகள் அனைவரும் இந்த பொது ஏலத்தில் பங் கேற்று பயன் பெற அழை ப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## 4,220 கிலோ சின்ன வெங்காயம் வயல்வெளியில் நேரடி விற்பனை

திருச்சி,: ஆர்வலர் குழு மூலமாக 4,220 கிலோ சின்ன வெங்காயம் வயல்வெளியில் நேரடியாக விற் பனை செய்யப்பட்டது. ரூ.1.1 லட்சம் விவசாயிக்கு உடனடி பட்டுவாடா செய்யப்பட்டது. திருச்சி மாவட்டம் உப்பிலியபுரம் வட்டாரம் சிறுநாவலூர் கிராமவிவசாயிகள் ஆர்வலர் குழு மூலம் சிறுநாவலூர் கிராமத்தில் சின்ன வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டு

இருந்தது. இதில் செந்தில் என்ற விவசாயிடமிருந்து அறுவடை செய்யப்பட்ட 4,220 கிலோ சின்னவெங்காயம் அம்பேயபாளையத்தை சேர்ந்த சின்னக்கன்னு என்ற வியாபாரியிடம் ஒரு கிலோ ரூ.24 வீதம் விற்பனை செய்யப்பட்டது. வேளாண் துறை மற்றம் வேளாண் வணிகத்துறை அலுவலர்கள் மூலம் நேர டியாக வயல் வெளியில் வியாபாரிகளை அழைத்து வந்து விற்பனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. இதில் மொத்த தொகை யான ரூ.1,01,280 ஐ வயல் வெளியிலேயே விவசாயி செந்திலுக்கு உடனடியாக பட்டுவாடாவும் செய்யப்பட்டது. இது குறித்து வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை துணை இயக்குனர் சந்திரசேகரன் கூறுகையில், திருச்சி மாவட் டம் தா. பேட்டை மற்றும் உப்பிலியபுரத்தை தொடர் ந்து, துறை யூர் வட்டா ரத் திலும் விவசாயிகள் ஆர்வலர்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு மூலம் துறையூர் வட்டாரத்தில் உள்ள வயல் வெளியில் சின்ன வெங்காயம் விற் பனை செய்வதற்காக வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையினர் தீவி ரமாக இறங்கியுள்ளது என் றார்.

## <u>திருவாரூருக்கு 5700 டன் யூரியா உரம் வந்தது</u>

திருவாரூர்,: ஆந்திரா மற்றும் குஜராத் மாநிலங்களிலிருந்து திருவாரூருக்கு வந்த 5700 மெ.டன் யூரியா உரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆந்திர மாநிலம் காக்கிநாடா மற்றும் குஜராத் மாநிலம் சூரத் ஆகிய ஊர்களிலிருந்து 100 வேகன்கள் மூலம் 5 ஆயிரத்து 700 மெ.டன் யூரியா உரம் நேற்று காலை திருவாரூர் ரயில் நிலையத்திற்கு வந்தது. இந்த உரம் திருவாரூரில் உள்ள தஞ்சை கூட்டுறவு விற்பனை இணையம் மூலமாக லாரிகளில் தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு அனுப்பி வைக்கும் பணி நடைபெற்றது. இதை திருவாரூர் கலெக்டர்

மதிவாணன் நேற்று ஆய்வு செய்தார். ஆய்வின்போது வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகணன், கூட்டுறவு மண்டல இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**<u>இயந்திர முறையில் திருந்திய நெல் சாகுபடி</u>**

செம்பட்டி,: செம்பட்டி அருகே ஆத்தூர் கிராமத்தில் இயந்திர முறையில் திருந்திய நெல் சாகுபடி நடவுப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நடவுப்பணிகளை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சம்பத்குமார் தொடங்கி வைத்தார். அப்போது அவர் கூறுகையில், திருந்திய நெல் சாகுபடி முறையை கையாண்டால் கூடுதல் மகசூல் மற்றும் வருமானம் கிடைக்கும். இயந்திர முறையில் நடவு செய்யும் விவசாயிகளுக்கு மானியமாக ஏக்கருக்கு ரூ. 1500 வழங்கப்படுகிறது என்றார். மேலும், திருந்திய நெல் சாகுபடி முறையில் குறைந்த விதை அளவு, குறைந்த வயதுடைய நாற்று (14 நாட்கள்) குறைந்த நீர் தேவை, 25 செ.மீட்டருக்கு 25 செ.மீட்டர் இடைவெளியில் நடவு செய்வது பற்றி எடுத்துரைத்தார். அப்போது மாவட்ட உழவர் பயிற்சி நிலைய துணை வேளாண்மை இயக்குனர் பாஸ்கரன், ஆத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் முருகேசன், வேளாண்மை அலுவலர் விஜயன், துணை வேளாண்மை அலுவலர் மோகன், உதவி வேளாண்மை அலுவலர் அரிராமன் மற்றும் அட்மா திட்ட பணியாளர்கள் உடன் இருந்தனர்.

**<u>விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>**

சிவகங்கை, : சிவக ங்கை வட்டார வேளாண் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. வேளாண் உதவி இயக்குநர் தனபாலன் தலைமை வகித்தார். இதில் நெற்பயிரில் பூச்சி தாக்குதல், அவற்றை கட்டுப்படுத்தும் முறை, நடப்பு மற்றும் வரும் பருவத்திற்கு ஏற்ற பயிர் ரகம் குறித்த விளக்கப்பட்டது. மேலும் கார்த்திகை பட்டத்திற்கு நிலக்கடலை

விதைகள், சிறுதானிய விதைகள் இருப்பு, பண்ணைக்குட்டைகளில் வளர் க்க மீன் குஞ்சுகள் வழங்கப்படுவது குறித்தும் தெரிவிக்கப்பட்டது. இதில் சிவகங் கை, ஒக்கூர், பெரியகோட் டை, தமறாக்கி, மதகுபட்டி பகுதியை சேர்ந்த விவசாயிகள் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

**<u>ரூ.81 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம்</u>**

அனுப்பர்பாளையம், : அவினாசி அருகே சேவூரில் ரூ.81 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலம் நடந்தது. நிலக்கடலை விலை குவிண்டாலுக்கு ரூ.100 வரை அதிகரித்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். அவினாசி அருகே சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் நிலக்கடலை ஏலம் நேற்றுமுன்தினம் நடந்தது. 6030 நிலக்கடலை மூட்டைகள் வந்திருந்தன. மொத்தம் ரூ.81 லட்சத்துக்கு நிலக்கடலை ஏலத்தில் விற்பனையானது. குவிண்டால் ஒன்று (காய்ந்தது) முதல் ரக நிலக்கடலை ரூ.4020 முதல் ரூ.4300 வரையிலும், இரண்டாவது ரகம் ரூ.3750 முதல் ரூ.3950 வரையிலும், மூன்றாவது ரக நிலக்கடலை, ரூ.3630 முதல் ரூ.3810 வரையிலும் ஏலம் போனது. குன்னத்தூர், ராயர்பாளையம், லூர்துபுரம், மங்கரசவலையபாளையம், தண்டுக்காரன்பாளையம், ராமியம்பாளையம், புளியம்பட்டி, சேவூர், நம்பியூர், மலையப்பாளையம், அன்னூர் ஆகிய பகுதிகளில் இருந்து 642 விவசாயிகளும், 15 வியாபாரிகளும் பங்கேற்றனர். இந்த தகவலை, சேவூர் ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) சரவணன் தெரிவித்தார்.

**<u>கரூர் அருகே இரண்டரை கிலோ அதிசய காளான்: மாணவர்கள் வியப்பு</u>**

கரூர், : கரூர் மாவட்டம் நன்னியூர் கிராமத்தின் சாலையோரத்தில் முளைத்திருந்த இரண்டரை கிலோ எடையுள்ள உணவு காளான்

அனைவரையும் ஆச்சரியப்பட வைத்தது. கரூர் மாவட்டம் நன்னியூர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி உள்ளது. நேற்று காலை 9மணியளவில் பள்ளியின் தலைமையாசிரியை ஜெயமணி என்பவர் பள்ளிக்கு அருகில் உள்ள சாலையோர பகுதியில் நடந்து சென்ற போது, பெரிய அளவிலான காளான் ஒன்று முளைத்திருப்பதை கண்டார். இதுகுறித்து பள்ளி ஆசிரியர் செந்தில்குமாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. காளான் முளைத்திருந்த இடத்துக்கு சென்ற பள்ளி ஆசிரியர், பெரிய அளவில் முளைத்திருந்த காளானை பறித்து வந்து, பள்ளி மாணவ, மாணவிகள் மத்தியில் பச்சையம் இல்லாத தாவர வகை காளான் எனவும், அதிகபட்சமாக அரைகிலோ அளவிலே வளரக்கூடிய இந்த உணவு வகை காளான் ஆச்சரியப்படும் வகையில் இரண்டரை கிலோ அளவில் வளர்ந்துள்ளது எனவும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விளக்கம் அளித்தார். இரண்டரை கிலோ எடையுள்ள இந்த உணவுக் காளானை பள்ளி மாணவ, மாணவிகள் மட்டுமின்றி, நன்னியூர் கிராம மக்களும் ஆச்சரியத்துடன் பார்த்துச் சென்றனர். மேலும், இந்த பள்ளியில் நேற்று உணவுத் திருவிழா நடைபெற்ற சமயத்தில் பெரிய அளவிலான காளான் கிடைத்திருப்பது விசேஷமான ஒன்று எனவும் ஆசிரியர் தெரிவித்தார்.

## <u>விவசாய குழுக்களுக்கு இயந்திரம், கருவி வேளாண் பொறியியல் துறை வழங்கியது</u>

ஈரோடு, : வேளாண் பொறியியல் துறை சார்பில் விவசாய குழுக்களுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் இலவசமாக வழங்கப் பட்டுள்ளது. வேளாண் பணிகளுக்கு போதிய ஆள் கிடைக்காததால் வேளாண் பணிகளில் ஏற்படும் சுணக்கத்தை போக்கும் வகையில் தமிழக அரசு வேளாண் பொறியியல் துறை சார்பில் பல்வேறு மானிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.தற்போது, நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும்

கருவிகளை அரசு, மானியத்தில விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. தற்போது வேளாண் வளர்ச்சி திட்ட விவசாயிகள் சங்கத்தின் கீழ் இயங்கி வரும் நான்கு கிளை குழுக்களுக்கு பவர் டில்லர் எனப்படும் விசை உழவு கருவி, நெல் நாற்று நடும் இயந்திரம், விசைக்களை எடுக்கும் கருவி ஆகியன வேளாண் பொறியியல் துறை சார்பில் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த வேளாண் கருவிகளின் செயல்பாட்டை விளக்கும்வகையில், எம்-6 கீழ்பவானி முறைநீர்பாசன விவசாயிகள் சபை மூலம் ராமநாயக்கம் பாளையத்தை சேர்ந்த விவசாயி சண்முகம் என்பவரின் தோட்டத்தில் வேளாண் பொறியியல் துறை சார்பில் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கீழ்பவானி முறைநீர் பாசன விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் காசியண்ணன் உட்பட ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். செயல் விளக்க நிகழ்வில் வேளாண் பொறியியல் துறையின் ஈரோடு உபகோட்ட உதவி செயற்பொறியாளர் வெற்றிவேலன், உதவிப்பொறியாளர்கள் தண்டபாணி, பாலசுப்ரமணியன், பார்த்திபன் மற்றும் ரங்கசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர். வேளாண் இயந்திரங்களை விவசாயிகள் குழுக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளதாகவும், இக்குழுக்கள் மூலம் குறைந்த தொகையை வாடகை கட்டணமாக நிர்ணயம் செய்து கருவிகளை பயன்படுத்தி கொள்ளலாம் என்றும் வேளாண் பொறியியல் துறை அறிவித்துள்ளது.

## தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் இயந்திர நெல் நடவுக்கு எக்டேருக்கு ரூ.1,500 மானியம்

பெரம்பலூர்,: தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இயந்திர நெல் நடவுக்கு எக்டேருக்கு ரூ.1500 நடவு மானியமாக வழங்கப்படுகிறது என பெரம்பலூர் வட்டார வேளாண் உதவி இயக்குநர் சேகர் தெரிவித்துள்ளார். பெரம்பலூர்அருகே இயந்திர நெல்நடவு சாகுபடி குறித்த செயல் விளக்கம் நேற்று நடந்தது. பெரம்பலூர் நகராட்சிக்குட்பட்ட அரணாரைக்கும்,

செஞ்சேரிக்கும் இடையே புறவழிச்சாலை அருகே நேற்று 15 ஏக்கரில் இயந்திர நடவுப்பணி மேற்கொள்ளப்பட்டது. பணிகளை பெரம்பலூர் மாவட்ட வேளாண்துறை இணை இயக்குநர் அழகிரிசாமி, துணைஇயக்குநர் அய்யாசாமி, உதவி இயக்குநர் சேகர் ஆகியோர் பார்வையிட்டனர். பின்னர் இயந்திர நடவு குறித்து வட்டார வேளாண் உதவி இயக்குநர் சேகர் தெரிவித்ததாவது : நெற்பயிர் சாகுபடியின் மேம்படுத்தப்பட்ட தொழில் நுட்பமான திருந்திய நெல் சாகுபடியின் முக்கிய அம்சமாக இயந்திர நடவுமுறை உள்ளது. திருந்திய நெல் சாகுபடி யின் முக்கியஅம்சங்களான முதிர்ந்த வயதுடைய நாற்றுகளின் நடவு, சீரான இடை வெளியில் நடப்படும் சதுர நடவு போன்ற செயல் முறைகளை கடைபிடிக்க இயந்திர நடவுமுறை மிகவும் பயனுள்ளதாக உள்ளது. தற்போதைய கால கட்டத்தில் விவசாயத்தில் முக்கியப் பிரச்சனையாக உள்ள ஆட்கள் பற்றாக்குறையை சமாளிக்க இயந்திர நடவு முறை ஒரு சிறந்த தீர்வாகவுள்ளது. மேலும் இயந்திர நெல்நடவு முறையால் நாற்றுகள் சீரான இடைவெளியிலும், சமமான ஆழத்திலும் நடப்படுவதால் பயிர்களின் வேர் வளர்ச்சி செம்மையாக இருக்கும். இதன் மூலம் நெற்பயிர் மண்ணிலிருந்து பெருமளவு சத்துக்களை எடுத்து அதிக எண் ணிக்கையிலான தூர்கள் உருவாகக் காரணமாகிறது. அதோடு சீரான இடைவெளியில் நடப்படுவதால், நெற்பயிரில் களை எடுப்பதற்கும், உரங்களைத் தெளிப்பதற்கும், பயிர் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளவும் சுலபமாகிறது. பெரம்பலூர் வட்டாரத்தில் நடப்பாண்டு இதுவரை 650 ஏக்கரில் நெல் நடவு முடிக்கப்பட்டுள்ளது. 1000 ஏக்கரில் நெல் நடவு மேற்கொள்ளத் தேவையான அளவு வயல் பகுதி தயார் படுத்தப்பட்டுள்ளது. பெரம்பலூர் வட்டாரத்தில் குறிப்பாக வெள்ளைப்பொன்னி, கர்நாடகா பொன்னி, கோ-49, ஏடிடி 43, ஏடிடி-45, பிபிடி ரகங்கள் பெருமளவு சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பெரம்பலூர் வட்டாரத்தில் இயந்திர நெல்நடவு தனியார் மூலமே

மேற்கொள்ள முடியும். இயந்திர நெல்நடவுக்காக, தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், நெல் இயக்கத் திட்டத்தின் மூலம் விண்ணப்பித்திடும் நபரின் இரண்டரை ஏக்கருக்கு (ஒரு எக்டேர்) ரூ.1,500 நடவு மானியமாக வழங்கப்படுகிறது. இது 100 விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. இந்த வாய்ப்பினை விவசாயிகள் முறையாகப் பயன்படுத்திப் பயன் பெறலாம் எனத் தெரிவித்தார். நிகழ்ச்சியின் போது, பெரம்பலூர் வட்டார வேளாண்அலுவலர் ரமேஷ், வட்டார தொழில் நுட்ப அலுவலர் உதயக்குமார், உதவி வேளாண் அலுவலர்கள் வீரசிங்கம், இளையராஜா, இளங்கோவன் மற்றும் விவசாயிகள் உடனிருந்தனர்.

## <u>27ம் தேதி நடக்கிறது விவசாயிகள் குறைதீர்கூட்டம்</u>

பெரம்பலூர்,: பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் 27ம்தேதி நடைபெறவுள்ளது என கலெக்டர் தரேஸ்அகமது தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது : பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 27ம்தேதி காலை 10மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்டஅரங்கில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் வேளாண் சம்பந்தமாக நீர்ப்பாசனம், கடனுதவிகள், வேளாண் இடு பொருட்கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத் திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். விவசாயிகள் அன்றைய தினம் தங்கள்பகுதி குறைகளை தெரிவிக்கலாம் எனத்தெரிவித்துள்ளார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## தமிழக அரசு மரவள்ளிக் கிழங்கிற்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் விவசாயிகள் கோரிக்கை



நொய்யல், தமிழக அரசு மரவள்ளிக் கிழங்கிற்கு விலை நிர்ணயம் செய்ய வேண் டும் என்று விவசாயி கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி கரூர் மாவட்டம், வேட்டமங்கலம் குந்தானி பாளையம், கவுண்டன்புதூர், ஓரப்புப்பாளையம், ஓலப் பாளையம், நல்லிக்கோவில் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளிக் கிழங்கு பயிரிட்டுள்ளனர். இப்பகுதிகளில் விளையும் மரவள்ளிக்கிழங்குகளை புதன்சந்தை, புதுச்சத்திரம், செல்லப்பம்பட்டி, மின் னாம்பள்ளி, கீரனூர், நாமகிரி பேட்டை, தொ.ஜேடர் பாளை யம், ஆத்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள சவ்வரிசி தயார் செய்யும் கிழங்கு மாவு மில்களுக்கு தரகர்கள் மூலம் டன்கணக்கில் வாங்கி அனுப்பி வைக்கின்றனர். மரவள்ளிக் கிழங்குகளை பாய்ண்ட் அடிப்படையில் வாங்குகின்றனர். கிழங்குகளில் எத்தனை பாய்ண்ட் டார்ச் சத்து இருக்கின்றதோ அதற்கு தகுந்தாற்போல் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. அதேபோல் சவ்வரிசி விலை உயரும் போதும், வீழ்ச்சி அடையும் போதும் சேக்கோ சர்வோ மூலம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. சவ்வரிசி விலை உயரும் போது மரவள்ளி கிழங்குக்கு

விலை உயர்வும், சவ்வரிசி விலை வீழ்ச்சி அடையும் போது மரவள்ளிக் கிழங்கு விலை குறைத்தும் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. மரவள்ளிக் கிழங்கில் இருந்து பசை மாவு மற்றும் பல்வேறு வகையான ஜிப்சங்கள் தயார் செய்யப்படுகிறது.

விலைவீழ்ச்சி

மேலும் பொதுமக்கள் மரவள்ளிக் கிழங்குகளை வாங்கி வேகவைத்தும் சாப் பிடுகின்றனர். இந்த நிலையில் சவ்வரிசி விலை வீழ்ச்சியின் காரண மாகவும், மரவள்ளி கிழங்கு உற்பத்தி அதிகரிப்பின் காரணமாக வும் மரவள்ளிக் கிழங்கு விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. அரசு விலை நிர்ணயம் செய்ய வேண்டும். இதன் காரணமாக ஒரு டன் மரவள்ளிக்கிழங்கு ரூ.7 ஆயிரத்திற்கு விற்பனை யானது. இந்த வாரம் ஒருடன் ரூ.5 ஆயிரத்து 500-க்கு விற்பனையாகிறது. சிப்ஸ் தயாரிப்பவர்கள் ஒருடன் மரவள்ளிக் கிழங்கு ரூ.6 ஆயிரத்திற்கு வாங்கிச் செல்கின்றனர். இந்த நிலையில் மரவள்ளிக் கிழங்கிற்கு தமிழக அரசு விலை நிர்ணயம் செய்து விவசாயிகளுக்கு வாழ் வளிக்க வேண்டுமென விவ சாயிகள் கோரிக்கை விடுத் துள்ளனர்.

## <u>பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்; நாளை நடக்கிறது</u>



பெரம்பலூர், பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நாளை (வியாழக்கிழமை) காலை 10 மணிக்கு பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட மன்றத்தில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் வேளாண்மை சம்பந்தமாக நீர்பாசனம், வேளாண்மை சம்பந்தப்பட்ட கடன்

உதவிகள், வேளாண்மை இடுபொருட்கள், வேளாண்மை எந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு குறைகளை தெரிவிக்கலாம். இந்த தகவலை கலெக்டர் தரேஸ் அகமது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**<u>வைகை தண்ணீர் பரமக்குடி வந்தது</u>**



பரமக்குடி, வைகை அணையில் இருந்து திறந்து விடப் பட்ட தண்ணீர் பரமக்குடிக்கு வந்தது. வைகை தண்ணீர் ராமநாதபுரம் மாவட்ட மக்களின் குடிநீர் தேவைக்கா கவும், விவசாயத்துக்காகவும் கடந்த 21-ந்தேதி வைகை அணையில் இருந்து தண் ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் நேற்று முன் தினம் இரவு பரமக்குடியை அடைந்தது. முதல் நாள் 2000 கன அடி தண் ணீரும், அதனை தொடர்ந்து தினமும் 1600 கன அடி வீதமும் தண் ணீர் திறக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 7 நாட்களுக்கு இந்த தண்ணீர் திறக்கப்படும். இதில் வலது பிரதான கால் வாயில் 600 கன அடியும், இடது பிரதான கால்வாயில் 700 கன அடியும் தண்ணீர் செல்கிறது. பரமக்குடிக்கு வைகை தண்ணீர் வந்து சேர்ந்துள்ளது என்ற தகவல் பரவியதும் பொதுமக்கள் கூட்டம் கூட் டமாக சென்று ஆற்றில் தண் ணீர் வருவதை ஆர்வமுடன் பார்த்து ரசித்தனர். வைகை ஆற்றில் தண்ணீர் வந்ததும் நகரில் உள்ள ஆழ்குழாய்க ளி லும், கிணறுகளிலும் நீர்மட் டம் உயர்ந்துள்ளது. குடிநீர் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் வைகை தண்ணீர் வந்துள்ளதாக பொதுமக்கள் கருதுகின்றனர். ஆற்றில் வரும் தண்ணீரை யாரும் திருட்டுத்தனமாக பயன்படுத் தாதவாறு பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் நரசிம்மன், உதவி செயற்பொ றியாளர் நாகரத்தினம்

ஆகியோர் கண்காணித்து வருகின்றனர். நிலத்தடி நீர் இதுகுறித்து அமைச்சர் சுந்தர்ராஜன் நிருபர்களிடம் கூறியதாவது:- ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக பருவமழை இல்லை. தற்போது பெய்து வரும் தொடர்மழையின் காரணமாக வைகை அணை யில் இருந்து ராமநாதபுரம் மாவட்ட விவசாயத்துக்காகவும், குடிநீர் தேவைக்காக வும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீரை பொது மக்கள் வீணாக்காமல் சிக் கனமாக பயன்படுத்த வேண் டும். விவசாயிகள் தங்களது தேவைக்கேற்றவாறு தண் ணீரை பகிர்ந்து கொண்டு விவசாய பணிகளை மேற் கொள்ள வேண்டும். ரூ.78 கோடியில் கட்டப்பட்டுள்ள தடுப்பு அணை மூலம் வைகை தண்ணீர் ஆறு முழுவதும் பரவலாக சென்று நிலத்தடி நீர் தேங்கும் அளவுக்கு பயனுள்ளதாக அமைந்துள்ளது. குளங்கள் மற்றும் கண்மாய் களில் தேங்கியுள்ள தண் ணீரை கிராம மக்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தற்போது தொடர்ந்து பெய்துவரும் மழையால் நீர் ஆதாரத்தை பேணிக்காக்கும் வகையில் மழைநீர் சேகரிப்பு திட் டத்தை முழுமையாக பயன் படுத்த வேண்டும். ராமநாத புரம் மாவட்டத்துக்கு தண் ணீர் திறக்க உத்தரவிட்ட முதல்-அமைச்சருக்கு இம் மாவட்ட மக்கள் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறி னார்.

**<u>ராமநாதபுரத்தில் புத்துயிர் பெற்ற ஊரணிகள்</u>**



ராமநாதபுரம், ராமநாதபுரத்தில் கழிவுநீர் குட்டைகளாக காணப்பட்ட பல ஊரணிகள் தூர்வாரப்பட்டு புத்துயிர் பெற்றுள்ளன. ஊரணிகள் வறட்சிக்கு பெயர் போன ராமநாதபுரம் மாவட் டத்தில் நிலத்தடி நீரும் கடும் உப்பாகத்தான் இருக் கும். எனவே மழைநீரை ஆங்காங்கே தேக்கி வைத்து

பயன்படுத்த ஏதுவாக ராமநாதபுரத்தை ஆண்ட மன்னர்கள் ஏராளமான கண்மாய்கள், ஊரணிகளை வெட்டி தண்ணீரை தேக்கி வைத்து குடிநீர் ஆதாரத்துக்கு வழிவகை செய்தனர். இதனால் நிலத்தடி நீர்மட்டம் பாதுகாக்கப்பட்டு வந்தது. ராமநாதபுரம் நகரில் சங்கிலிக்கோர்வை போல அமைக்கப்பட்ட ஊரணிக ளில் ஒன்று நிரம்பியவுடன் அடுத்த ஊரணிக்கு தண்ணீர் செல்லும் வகையில் வாய்க் கால்கள் அமைக்கப்பட்டி ருந்தது. காலப்போக்கில் இந்த வரத் துக்கால்கள் அனைத்தும் தூர்ந்து விட்டன. ஆக்கிரமிப் புகளால் ஏராளமான ஊர ணிகள் இருந்த இடம் தெரிய வில்லை. மீதமுள்ள ஊரணி களும் குப்பை கொட்டுவதற் கும், கழிவுநீரை கடத்துவதற் கும் பயன்படுத்தப்பட்டு வரு கிறது. இதனால் நகரில் உள்ள எந்த ஊரணியும் பொதுமக் கள் குளிப்பதற்கு பயன்ப டுத்த முடியாத நிலையில் சுகாதாரக் கேடாக காட்சி அளிக்கிறது. மாவட்ட கலெக்டர் நந்தகுமார் இப் பிரச்சினையில் சிறப்பு கவனம் செலுத்தி நகரின் மத்தியில் உள்ள செம் பொன்குண்டு ஊரணியை நகரசபை உதவியுடன் சீரமைத்து உள்ளார். மேலும் அந்த ஊரணயில் கழிவுநீர் கலப்பது தடுக் கப்பட்டதால் தற்போது பெய்த மழையினால் குளம் நிரம்பி சுத்தமாக காட்சி அளிக்கிறது. இதே போல ராமநாதபுரம் நகரின் நுழைவாயில் பகுதியில் உள்ள சிதம்பரம் பிள்ளை ஊரணி குப்பை கிடங்காகவும், கழிவுநீர் குளமாகவும் நீண்டகாலமாக இருந்து வந்தது. இதனையும் கலெக்டர் நந்தகுமாரின் முயற்சியின் பேரில் ராம நாதபுரத்தை சேர்ந்த தரணி விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் சார்பில் ரூ.25 லட்சம் செலவில் தூர்வாரி சீரமைக்கப்பட்டுள் ளது. மேலும் கரையை சுற் றி லும் மரக் கன்றுகள் நடப்பட்டுள்ளன. தற்போது இந்த ஊரணி நீர் நிரம்பி புத்துயிர் பெற்றுள்ளது.

பயிற்சி

இதுகுறித்து தரணி விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவன தலைவர் முருகேசன் கூறிய தாவது:- ராமநாதபுரம் மாவட்ட கலெக்டர் நந்த குமார் வழிகாட்டுதலின்பேரில் ஊரணிகளை பாதுகாக்க வேண்டியதன்

அவசியத்தை மக்க ளுக்கு உணர்த்தும் வகையில் சிதம்பரம் பிள்ளை ஊரணியை தூர்வாரி வழங்கியுள்ளோம். எட் டிவயல் கிராமத்தில் விவசாய பண்ணை அமைத்து ஒருங்கிணைந்த பண்ணையம் மூலம் இயற்கை விவசாயம் செய்து வருகிறோம். இங்கு உழவர்களுக்கு இயற்கை விவசாயம் மற்றும் சிறுதானிய உற்பத்தி குறித்து இலவச பயிற்சி அளித்து வருகிறோம். மேலும் தரணி விவசாய பண்ணையில் ஆடு, மாடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, நெல் விவசாயம், கேழ்வரகு, குதிரைவாலி, கம்பு போன்ற தானிய பயிர்கள், பல வகை யான காய்கறிகள், கீரைகள் என அனைத்தும் இயற்கை உரங்களை பயன்படுத்தி விளைவிக்கப்படுகிறது. தற்போது ஆண்டுக்கு ஒரு கிராமத்தை தத்தெடுத்து இயற்கை விவசாயம் குறித் தும், ஒருங்கிணைந்த பண் ணையம் அமைக்கவும் விவ சாயிகளுக்கு பயிற்சி அளித்து வருகிறோம். பசுவின் சாணம், சிறுநீர், பால், தயிர், நெய் ஆகியவற்றை உரிய விகிதத் தில் சேர்த்து பஞ்சகவ்யம் என்ற பயிர் ஊக்கி தயாரித்து விவசாயிகளுக்கு வழங்கி வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## தஞ்சை அருகே 3 ஆண்டுகளுக்கு பிறகு விவசாயிகள் சம்பா சாகுபடி கலெக்டர் சுப்பையன் பார்வையிட்டார்



தஞ்சை அருகே 3 ஆண்டுகளுக்கு பிறகு விவசாயிகள் சம்பா சாகுபடி செய்ததை கலெக்டர் சுப்பையன் நேரில் பார்வையிட்டார். கலெக்டர் ஆய்வு தஞ்சையை அடுத்த முன்னையம்பட்டி கிராமத்தில் அட்மா திட்டத்தின் சார்பில் மக்காச்சோளம் சாகுபடி செய்வது குறித்து பயிற்சிமுகாம் நடைபெற்று வருகிறது. இந்த முகாமில் 25 விவசாயிகளுக்கு மக்காச்சோளம் சாகுபடி செய்வதற்கான தொழில்நுட்பம், மக்காச்சோளத்திற்கு நன்மை, தீமை செய்யும் பூச்சிகள் எவை, களைகள் போன்றவை குறித்து விளக்கம்

அளிக்கப்பட்டு வருகிறது. இந்த பயிற்சி குறித்து தஞ்சை மாவட்ட கலெக்டர் சுப்பையன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது அவரிடம், உய்யக்கொண்டான் வாய்க்கால் மூலம் முத்துடையான் ஏரிக்கு தண்ணீர் வரும். அந்த ஏரியில் இருந்து வடிகால் மூலம் பாசனத்திற்காக தண்ணீர் வர வேண்டும். ஆனால் இந்த ஆண்டு இதுவரை தண்ணீர் வரவில்லை. வடிகால் ஆக்கிரமித்து இருப்பதால் தண்ணீர் வரவில்லை. எனவே வடிகாலில் காணப்படும் ஆக்கிரமிப்பை அகற்றி, பாசனத்திற்கு தண்ணீர் வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்காச்சோளத்தை நியாயமான விலையில் கொள்முதல் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கூறினர். ஆக்கிரமிப்பு அகற்றப்படும் இதைகேட்ட கலெக்டர் சுப்பையன், ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கும், தண்ணீரை கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக கூறினார். அதேபோல் முன்னையம்பட்டி கிராமத்தை சேர்ந்த இருதயசாமி தனது வயலில் நீடித்த நிலையான கரும்பு சாகுபடிக்கான நாற்றங்கால் தயார் செய்து இருந்தார். அந்த நாற்றங்காலை கலெக்டர் சுப்பையன் பார்வையிட்டார். பின்பு 3 ஆண்டுகளுக்கு பின்னர் திருமலைசமுத்திரத்திரம் கிராமத்தில் குரும்பூண்டி பிடாரி ஏரி தண்ணீர் மூலம் விவசாயிகள் மேற்கொண்டுள்ள சம்பா சாகுபடி பணியை கலெக்டர் சுப்பையன் பார்வையிட்டார்.

மகிழ்ச்சி

அப்போது விவசாயிகள் சிலர், கடந்த 3 ஆண்டுகளாக எந்த சாகுபடியும் செய்யாமல் காடுபோல் காணப்பட்டது. கடந்த 3 மாதங்களுக்கு முன்பு வரை கூட காடாக காணப்பட்டது. கலெக்டரின் முயற்சியால் பிடாரி ஏரிக்கு தண்ணீர் வந்துள்ளது. இதனால் 3 ஆண்டுகளுக்கு பின்னர் தற்போது சம்பா சாகுபடி பணியை தொடங்கியுள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது என்று கூறினர். மேலும் ஏரியை ஆழப்படுத்தி தர வேண்டும். சம்பா சாகுபடிக்கு போதுமான

தண்ணீரை கடைசி வரைக்கும் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கலெக்டரிடம் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். உளுந்து சாகுபடிக்கு விதைதேவை

இதை கேட்டறிந்த கலெக்டர் சுப்பையன், சம்பா சாகுபடிக்கு தேவையான அளவு தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். கோடைக்காலத்தில் பிடாரி ஏரியை தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். அப்போது வல்லம்புதூரை சேர்ந்த விவசாயிகள் சிலர், கலெக்டரை நேரில் சந்தித்து, எங்கள் பகுதிக்கு தண்ணீர் காலதாமதமாக கிடைத்து இருப்பதால் சம்பா சாகுபடி செய்யவில்லை. நாங்கள் உளுந்து சாகுபடி செய்ய ஆடுதுறை-5 என்ற விதையை உடனடியாக வழங்க வேண்டும் என்றனர். இதை கேட்ட கலெக்டர் சுப்பையன், உளுந்து சாகுபடி செய்ய விரைவாக விதை வழங்கப்படும் என்று உறுதிஅளித்தார். பின்பு செங்கிப்பட்டி டி.பி. சானிடோரியத்தில் மரக்கன்றுகளுக்கான நாற்றங்கால் வளர்க்கப் பட்டுள்ளதை கலெக்டர் சுப்பையன் பார்வையிட்டார். கலெக்டருடன் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வரதராஜன், வேளாண்மைத்துறை இணை இயக்குனர் சேகர், துணை இயக்குனர்கள் சீனிவாசன், கிருஷ்ணகுமார், உதவி இயக்குனர்கள் பாண்டியராஜன், நெடுஞ்செழியன், பூதலூர்ஒன்றியக்குழு தலைவி மணிமேகலை திருஞானசம்பந்தம் மற்றும் பலர் சென்றனர்.